# உங்கள் நூலகக் கற்றல் பயணம்



# நூலகக் கற்றல் பயணத்தின் தொடக்கம்

வணக்கம்!

இந்த நூலகக் கற்றல் பயணம் பொது நூலகங்கள் வழங்கும் மின்னிலக்கச் சேவைகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. உங்கள் பயணத்தில் நீங்கள் பின்வரும் நிறுத்தங்களை ஆராயும்போது இந்த வழிகாட்டி உங்களுக்குக் கைகொடுக்கும்:

1. முதலாம் நிறுத்தம் — myLibrary username-ஐயும் NLB Mobile செயலியையும் அறிமுகப்படுத்துதல்
2. இரண்டாம் நிறுத்தம் — உள்ளூர் மின் செய்தித்தாள்களை அறிமுகப்படுத்துதல்
3. மூன்றாம் நிறுத்தம் — NLB மின்வளங்களை அறிமுகப்படுத்துதல்

ஒவ்வொரு நிறுத்தத்தின் முடிவிலும், உங்கள் புரிதலை நினைவுகூற ஓர் எளிய நடவடிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கேற்ற நேரத்தில் இதை நீங்கள் செய்யலாம். விடைகளை நடவடிக்கை பக்கத்தின் இறுதியில் காணலாம்.


பயணத் திட்டம்
தொடக்கம்
myLibrary username-ஐயும் NLB Mobile செயலியையும் அறிமுகப்படுத்துதல்
1
உள்ளூர் மின் செய்தித்தாள்களை அறிமுகப்படுத்துதல்
2
NLB மின்வளங்களை அறிமுகப்படுத்துதல்
3
முடிவு

# myLibrary username-ஐயும் NLB Mobile செயலியையும் அறிமுகப்படுத்துதல்



இப்போது எமது நூலகத்தின் சேகரிப்புகளையும் மின்வளங்களையும் எந்நேரமும் நீங்கள் அணுகலாம். myLibrary username-ஐப் பயன்படுத்தி, நீங்கள் ஆயிரக்கணக்கான நூல்களையும் பல உள்ளூர் செய்தித்தாள்களையும் இணையம்வழி பெற முடியும்!

## myLibrary username என்றால் என்ன?

myLibrary username என்னும் பயனர்பெயர் வழி தேசிய நூலக வாரியம் (NLB) வழங்கும் அனைத்து மின்னிலக்கச் சேவைகளையும் நூலக உறுப்பினர்கள் பெறலாம். ஒவ்வொருவரின் myLibrary பயனர் பெயரும் தனித்துவமானது! பயனர் பெயரில் உங்கள் அடையாள அட்டையின் (NRIC) எண்ணையோ சிறப்பு எழுத்துகளையோ பயன்படுத்த முடியாது. மேலும், பயனர்பெயரை ஒருமுறை உருவாக்கிய பின்பு அதனை மாற்ற முடியாது.

நீங்கள் NLB உறுப்பினர் என்றால், myLibrary பயனர் பெயருக்காகப் பதிவுசெய்யலாம். உங்களுக்கு myLibrary பயனர் பெயர் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள, account.nlb.gov.sg இணையத்தளத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் myLibrary பயனர் பெயரைப் பெற்றிருக்கவில்லை என்றால், அதே இணைத்தளத்தின் வழியாக ஒரு பயனர்பெயரை நீங்கள் உருவாக்கிக்கொள்ளலாம்.

## மின்னிலக்கச் சேவைகளைப் பயன்படுத்துங்கள்

myLibrary பயனர் பெயர் NLB இணையத்தளம் (nlb.gov.sg) வழியாக உங்களை எல்லா மின்னிலக்கச் சேவைகளையும் பயன்படுத்த அனுமதிக்கிறது. உங்கள் கையடக்க சாதனத்தில் NLB Mobile செயலியை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அதற்குப்பின் myLibrary பயனர் பெயரைப் பயன்படுத்தி, நீங்கள் இவற்றைச் செய்யலாம்:



**1 எளிதில் இரவல் பெற்று வாசித்தல்:**

**a.** மின் நூல்கள், மின் செய்தித்தாள்கள், மின் சஞ்சிகைகள், மற்ற மின்வளங்கள் ஆகியவற்றை வாசித்தல்

**b.** நூல் இரவல் நிலையங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, NLB Mobile செயலியைப் பயன்படுத்தி அச்சு நூல்களை ஸ்கேன் செய்து இரவல் பெறுதல்



**2 உங்கள் நூலகக் கணக்கை எளிதில் கண்காணித்தல்:**

**a.** நூலகக் கட்டணங்களை இணையம்வழி செலுத்துதல்

**b.** இரவல், ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருள்கள், கட்டணங்கள்/அபராதங்கள் ஆகியவற்றிற்கான மின்னஞ்சல் விழிப்பூட்டல்களைப் பெறுதல்

**c.** இரவல்களைப் புதுப்பித்தல்




**3 நூலக நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து பதிவு செய்தல்**



**4 பொது நூலகங்களில் மின் செய்தித்தாள்களையும் பல்லூடக நிலையங்களையும் பயன்படுத்துதல்**

## மொபைல் செயலிகளைப் பற்றிய அனைத்து விவரங்களும்



**ஆப்** என்பது செயலியின் ஆங்கிலச் சுருக்கம். இவை நாம் செய்யவேண்டியவற்றை எளிதாக ஆக்குகின்ற கணினி நிரல்கள். உதாரணத்திற்கு, உணவுகளை வாங்குதல், திரைப்பட நுழைவுச் சீட்டுகளுக்கு முன்பதிவு செய்தல், பணம் செலுத்துதல் ஆகியவற்றைச் செய்வதற்கும் விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கும் கூட செயலிகள் உள்ளன. மொபைல் செயலிகளை உங்கள் கைப்பேசியில் நிறுவிக்கொண்டு பல பயனுள்ள பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

## ஸ்டோருக்கு வாருங்கள்

நீங்கள் செயலிகளை ஆப் ஸ்டோரிலிருந்து பெறலாம். இதை உங்கள் கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து, செயலிகளின் மின்னிலிக்க விவரப்பட்டியலாகப் பயன்படுத்தலாம். உங்களுக்கு வேண்டிய புதிய செயலிகளைப் பெற ஒவ்வொரு கைப்பேசியிலும் ஆப் ஸ்டோர் உண்டு.

முதலாவதாக, உங்கள் கைப்பேசியில் ஆப் ஸ்டோரின் சின்னம் எவ்வாறு தோன்றுகிறது என அடையாளம் கண்டு கொள்ளுங்கள். இது Apple, Samsung போன்ற கைப்பேசிகளில் வெவ்வேறாக இருக்கலாம். மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஸ்டோர்கள் Google Play (Android பயனர்களுக்காக), App Store (iOS பயனர்களுக்காக) ஆகியவை ஆகும். நீங்கள் ஆப் ஸ்டோர் சின்னத்தைத் தட்டும்போது மெய்நிகர் ஸ்டோருக்குள் நுழைவீர்கள். அங்கு உங்கள் கைப்பேசியில் சேர்ப்பதற்கான புதிய செயலிகளைத் தேடத் தொடங்கலாம்.

## நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய ஐந்து விஷயங்கள்

**1**



பிற ஸ்டோர்களும் உள்ளன. Huawei சாதனங்களில் AppGallery என்ற ஸ்டோர் பயன்படுத்தப்படுகிறது.

**2**

சில செயலிகள் இலவசம். அதேவேளையில் சிலவற்றுக்குக் கட்டணம் செலுத்தத் தேவைப்படுகிறது.



**3**



மொபைல் செயலிகளைப் பதிவிறக்கம் செய்ய உங்கள் மொபைல் திட்டத்திலிருந்து அதிகளவு தரவு தேவைப்படலாம். உங்கள் தரவு வரம்பை மீறாதிருக்க, புதிய செயலிகளைப் பதிவிறக்கும் செய்யும் முன்னர் Wi-Fi-உடன் இணைத்துக் கொள்வது நல்லது.

**4**

மொபைல் செயலிகள் முறையாக மேம்படுத்தப்படுகின்றன. சில மேம்பாடுகள் சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், முக்கிய மேம்பாடுகள், செயலியின் தோற்றம், அம்சங்கள் ஆகியவற்றை மேம்படுத்தவும் செய்யப்படுகின்றன.



**5**



மோசடி செயலிகளைப்பற்றி கவனமாக இருங்கள். உங்கள் சாதனத்தின் அதிகாரப்பூர்வ ஆப் ஸ்டோரிலிருந்து கிடைக்கும் செயலிகளை மட்டுமே பயன்படுத்துங்கள்.



# NLB Mobile செயலி

**NLB Mobile செயலியைப் பயன்படுத்தி நூலக அனுபவத்தை வசதியாக நீங்கள் பெறலாம்.**

1. அச்சு நூல்கள், மின் நூல்கள், ஒலி நூல்கள், மின் சஞ்சிகைகள், மற்ற மின்வளங்கள் ஆகியவற்றை எங்கள் விவரப் பட்டியலில் தேடலாம்.


2. நூலகத்தில் உள்ள பொருள்களை இரவல் பெறுவதற்கு ஸ்கேன் செய்யலாம்.

3. மின் நூல்கள், ஒலி நூல்கள், மின் செய்தித்தாள்கள், மின் சஞ்சிகைகள் ஆகியவற்றை இரவல் பெறுலாம்; ஒதுக்கீடு செய்யலாம்; பதிவிறக்கம் செய்யலாம்.

4. நூலக நிகழ்ச்சிகளைத் தேடி அவற்றுக்காகப் பதிவு செய்யலாம்*.

5. உங்கள் நூலகக் கணக்கைச் சரிபார்த்துக் கட்டணங்களை இணையம்வழி செலுத்தலாம்.

6. NLB இணையத்தளங்களுக்கு NLB QR Login * வழியாக விரைவாக செல்லலாம்.




7. உங்கள் மின் அட்டையைப் (eCard*) பயன்படுத்தி நூலகங்களின் இரவல் நிலையங்களில் பொருள்களை இரவல் பெறுதல், ஒதுக்கீடு செய்தவற்றைப் பெற்றுக்கொள்ளுதல், கட்டணங்களைச் செலுத்துதல் என பலவற்றைச் செய்யலாம்.

8. செயலியின் அறிவிப்புகள் (push notifications) வழி நூலக அறிவிப்புகளையும் நினைவூட்டல்களையும் பெறலாம்.

9. Discover (கண்டறி) பக்கத்தில் மொழி வடிகட்டி அம்சத்தைப் பயன்படுத்தி தாய்மொழியில் தகவல்களைப் பெறலாம். இது புதிய வரவுகளுக்கும் தொகுக்கப்பட்ட வாசிப்புகளுக்கும் பொருந்தும்.

10. Discover பக்கத்தில் உள்ள “You May Like “ (“நீங்கள் விரும்பலாம்”) பெட்டகத்தில் உங்கள் வாசிக்கும் பழக்கத்திற்கேற்ப செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளைப் பார்வையிடலாம்.


## எண்கள் 4, 6 & 7-க்கான கூடுதல் தகவல்கள்

### எங்கள் நிகழ்ச்சிகளுக்கு எவ்வாறு பதிவுசெய்வது என்று சரியாகத் தெரியவில்லையா?

படிப்படியான வழிகாட்டல்களுக்கு இந்த இணையத்தளத்திற்குச் செல்லவும்: go.gov.sg/toyl-evbm


### NLB QR Login என்றால் என்ன?

இது உங்கள் myLibrary பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் பயன்படுத்தாமலேயே NLB-இன் சேவைகளைப் பெறுவதற்கான மற்றொரு உள்நுழையும் (sign in) முறையாகும். NLB-இன் இணையத்தளங்களில் உள்நுழையும்பொழுது (உதாரணத்திற்கு உங்கள் மடிக்கணினியிலிருந்து அல்லது பொது நூலகங்களில் உள்ள பல்லூடக நிலையங்களிலிருந்து) NLB Mobile செயலியின் புகைப்பட அம்சத்தைப் பயன்படுத்தி விரைவுத் தகவல் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்.




### NLB Mobile செயலியிலிருந்து எவ்வாறு உங்கள் மின் அட்டையைப் பெறுவது?

Discover (கண்டறி), Highlights (சிறப்பிக்கப்பட்டவை), Account (கணக்கு) என பல பக்கங்களின் வழி மின் அட்டையை அணுக முடியும். செயலியில் திரையின் வலது மேற்புறத்தில் காணப்படும் மின் அட்டை சின்னத்தைத் தட்டி உங்கள் நூலக அட்டையை விரைவுத் தகவல் குறியீட்டின் வடிவில் பெறுங்கள். நூலகங்களின் இரவல் நிலையங்களில் பொருள்களை இரவல் பெறுதல், ஒதுக்கீடு செய்தவற்றைப் பெற்றுக்கொள்ளுதல், கட்டணங்களைச் செலுத்துதல் என பலவற்றுக்கு உங்கள் மின் அட்டையைப் பயன்படுத்தலாம்.



# NLB Mobile செயலி மூலம் எவற்றையெல்லாம் செய்யமுடியும்?

ஒவ்வொரு வாக்கியத்திற்கும் சரி அல்லது தவறு என்று வட்டமிடவும்.


| | | |
|---|---|---|
| கேள்வி 1. | நான் ஒரு நூலை ஒதுக்கீடு செய்ய முடியும். | சரி / தவறு |
| கேள்வி 2. | நூலகத்தின் புதிய உறுப்பினராக நான் பதிய முடியும். | சரி / தவறு |
| கேள்வி 3. | NLB-இன் மின்வளங்களை நான் அணுக முடியும். | சரி / தவறு |
| கேள்வி 4. | என் நூலக மின் அட்டையைப் பயன்படுத்த முடியும் | சரி / தவறு |
| கேள்வி 5. | நான் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். | சரி / தவறு |
| கேள்வி 6. | நூலகத்தில் ஓர் அச்சு நூலை இரவல் பெற நான் ஸ்கேன் செய்ய முடியும். | சரி / தவறு |
| கேள்வி 7. | நூலக நிகழ்ச்சிகளுக்கு நான் பதிவுசெய்ய முடியும். | சரி / தவறு |
| கேள்வி 8. | நான் நூல்களை வாங்க முடியும். | சரி / தவறு |

---

**விடைகள்**

கேள்வி 1. சரி
கேள்வி 2. சரி
கேள்வி 3. சரி
கேள்வி 4. சரி
கேள்வி 5. தவறு
கேள்வி 6. சரி
கேள்வி 7. சரி
கேள்வி 8. தவறு

# உள்ளூர் மின் செய்தித்தாள்கள் அறிமுகம்



உங்களது விருப்பத்திற்குரிய செய்தித்தாள்களை உங்கள் கைப்பேசியில் அல்லது கணினியில் நீங்கள் வாசிக்கலாம். கீழ் கொடுக்கப்பட்டுள்ள சில செய்தித்தாள்களை வாசித்துப் பாருங்கள்!

**1.** தி ஸ்ட்ரெய்ட் டைம்ஸ்
**2.** தி பிஸினஸ் டைம்ஸ்
**3.** பெரித்தா ஹரியான்
**4.** தமிழ் முரசு
**5.** லியான்ஹே ஜாபாவ்
**6.** ஷின் மின் டெய்லி நியூஸ்

## மின்செய்தித்தாள்கள் வாசிப்பதற்கான ஐந்து காரணங்கள்!

- நீங்கள் விரும்பும் எந்த நேரத்திலும் வாசிக்கலாம்.
- அவற்றை எந்த இடத்திலும் உங்கள் கைப்பேசியில் வாசிக்கலாம். உங்கள் கைப்பேசியில் பழைய, புதிய வெளியீடுகளை எளிதாகப் பார்க்க முடியும்.
- எழுத்துகள் மிகச் சிறியதாக உள்ளனவா? உங்களுக்குப் பொருத்தமான அளவிற்கு பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ ஆக்கிக் கொள்ளலாம்!
- NLB Mobile செயலியைத் திறந்த சில நிமிடங்களுக்குள் விரைவாக அணுக முடியும்.
- இவை காகிதப் பயன்பாட்டைக் குறைத்துச் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கின்றன.

## மின்செய்தித்தாள்களை வாசித்தல்

மின்செய்தித்தாள்களை வாசிக்கப் பல வழிகள் உள்ளன:



**1. NLB Mobile செயலி வழியாக**
செயலியைத் திறந்து, "SPH Media Newspapers" சின்னத்தைத் தட்டி உள்ளூர் மின்செய்தித்தாள்கள் தொகுப்பைக் கண்டறியுங்கள்.




**2. உங்கள் தனிநபர் கணினி வழியாக**
உங்கள் கணினியில் NLB இணையத்தளத்துக்குச் (go.gov.sg/nlb-enews) செல்லுங்கள். வலது மேற்புற மூலையில் உள்ள பொத்தான் வழியாக உங்கள் myLibrary பயனர் பெயரைச் செலுத்தி உள்நுழையுங்கள். நீங்கள் விரும்பும் செய்தித்தாளைத் தேர்தெடுத்தப் பின்பு நீங்கள் SPH ePaper இணையத்தளத்திற்கு அழைத்துச்செல்லப்படுவீர்கள்.



**3. பொது நூலகங்களுக்கு வருகை புரிவதன்வழி**
எமது பல்லூடக நிலையங்கள்வழி மின்செய்தித்தாள்களை வாசிக்க பொது நூலகங்களுக்கு வருகை புரியுங்கள்.

# உங்கள் மின் செய்தித்தாள்களைப் பற்றி எவ்வளவு நன்றாக அறிந்து வைத்துள்ளீர்கள்?

**கீழ்க்காணும் புதிரில் உங்கள் விடைகளை வட்டமிடவும்.**

**1** பின்வரும் தலைப்புகளில் எவை மின் செய்தித்தாள்களாகக் **கிடைப்பதில்லை**?

a. தி ஸ்ட்ரெய்ட் டைம்ஸ், தமிழ் முரசு
b. லியான்ஹே ஜாபாவ், ஷின் மின் டெய்லி நியூஸ்
c. தி பிஸினஸ் டைம்ஸ், டுடே நியூ பேப்பர்
d. பெரித்தா ஹரியான், ஷின் மின் டெய்லி நியூஸ்

**2** சிங்கப்பூரில் வெளியாகும் மின் செய்தித்தாள்களில் எத்தனை செய்தித்தாள்களை நீங்கள் அணுக முடியும்?

a. எட்டு
b. ஆறு
c. நான்கு
d. ஏழு

**3** எது நூலக உறுப்பினர்கள் மின் செய்தித்தாள்களை அணுகச் **சரியான வழி**?

a. உங்கள் தனிநபர் கணினி வழியாக
b. பொது நூலகங்களில் உள்ள பல்லூடக நிலையங்களின் வாயிலாக
c. NLB Mobile செயலி வழியாக
d. மேல் காணப்படும் அனைத்து வழிகளும்

**4** ஏன் மின் செய்தித்தாள்கள் உங்களுக்குச் சிறந்த அனுபவத்தை வழங்குகின்றன?

a. நீங்கள் விரும்பும் எந்த நேரத்திலும் வாசிக்கலாம்.
b. அவை கையடக்கமானவை.
c. எழுத்துகளை நீங்கள் விரும்பும் அளவிற்கு பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ ஆக்கிக் கொள்ளலாம்.
d. மேல் காணப்படும் அனைத்தும்

**5** மின் செய்தித்தாள்கள் சேவை இலவசமாகக் கிடைக்கிறதா?

a. ஆம்
b. இல்லை

---

**விடைகள்**

1. C 2. B 3. D 4. D 5. A

# NLB-இன் மின்வளங்கள் அறிமுகம்



வாழ்வின் எந்த நிலையில் இருந்தாலும் கற்றல் ஒருபோதும் முடிவதில்லை! மின் தரவுத்தளங்கள், மின் நூல்கள், மின் செய்தித்தாள்கள், மின் சஞ்சிகைகள், மேலும் சிங்கப்பூரைப் பற்றிய பல வளங்கள் ஆகியவற்றை NLB-இன் மின்வளங்களில் கண்டறியுங்கள்.

## இன்று நம்மிடம் உள்ளவை:





80-க்கும் மேற்பட்ட தரவுத்தளங்கள்





600,000-க்கும் மேற்பட்ட மின் நூல்கள்




60 மொழிகளில் 6,000-க்கும் மேற்பட்ட மின் செய்தித்தாள்களும் மின் சஞ்சிகைகளும்




கிட்டத்தட்ட 2 மில்லியன் இசைப் பதிவுகள்





NLB-இன் மின் வளங்களை NLB Mobile செயலி வழியாக அல்லது மின் வளங்கள் இணையத்தளம் வாயிலாக நீங்கள் அணுகலாம். சந்தா பதிவுபெற்ற தரவுத்தளங்களை அணுக, உங்கள் myLibrary பயனர் பெயரைப் பயன்படுத்தி உள்நுழைவு செய்ய வேண்டும். இருப்பினும், காப்புரிமை / உரிமம் கட்டுப்பாடுகளின் காரணத்தினால் எல்லா தரவுதளங்களையும் வீட்டிலிருந்தவாறே பயன்படுத்த முடியாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## NLB-இன் மின்வளங்களை எவ்வாறு அணுகுவது?

### 1 எங்கள் மின்வளங்கள் இணையத்தளம்வழி: eresources.nlb.gov.sg

இப்பக்கத்தின் வலது மேற்புறத்தில் காணப்படும் “Login”-ஐ (உள்நுழைவு) தட்டி, உங்கள் பயனர் பெயரையும் கடவுச்சொல்லையும் செலுத்தி உள்நுழையுங்கள். அல்லது, NLB செயலி வழியாக NLB QR Login முறையையும் பயன்படுத்தலாம்.











### 2 NLB Mobile செயலி வழியாக


NLB மொபைல் பக்கத்தில் “more”-ஐ (மேலும்) தட்டுங்கள். Online resources (மின் வளங்கள்) என்பதன் கீழ் “eResources for Seniors”-ஐ (மூத்தோருக்கான மின் வளங்கள்) தட்டுங்கள். பின் “Proceed”-ஐ (மேற்செல்) தட்டுங்கள்.









## மின் நூல்கள், மின் சஞ்சிகைகள், மின் செய்தித்தாள்கள் ஆகியவை

### HyRead சீன மின் நூல்களும் மின் சஞ்சிகைகளும்

தைவான், ஹாங்காங், சீனா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கும் சீன மின் நூல்களையும் மின் சஞ்சிகைகளையும் HyRead வழங்குகிறது. உங்கள் உலாவியிலிருந்து (browser) அல்லது HyRead மொபைல் செயலி வாயிலாக (Apple App Store அல்லது Google Play Store -இல் கிடைக்கும்) HyRead-ஐ அணுகவும்.

### PressReader


PressReader உலகின் முன்னணி செய்தித்தாள்களை 100-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 60 மொழிகளில் வழங்குகிறது. வெளியீடுகள் முழு மின் மறுபதிப்புகளாகவும் முக்கிய சொற்களால் தேடுதல், மொழிபெயர்ப்பு, ஆடியோ செயற்பாடு என பல மேம்பட்ட மின் அம்சங்களுடனும் வழங்கப்படுகின்றன.



## இசை

### Naxos Music நூலகம்

தேவைகேற்ப ஸ்ட்ரீமிங் (on-demand streaming) செய்யப்படுகின்ற பாரம்பரிய இசைப் பதிவுகளைக் கேளுங்கள்.



## சிங்கப்பூரைப் பற்றிய வளங்கள்

### இணையம்வழி தேசிய நூலகம்

தேசிய நூலகத்தின் மின் தொகுப்புகளான மரபுடைமை நூல்கள், கையெழுத்து பிரதிகள், இசை, புகைப்படங்கள், செய்தித்தாள்கள் என மேலும் பலவற்றையும் பார்வையிடுங்கள்.

இணையத்தளம்: nlb.gov.sg/main/nlonline

### NewspaperSG

சிங்கப்பூரில் 1827-ஆம் ஆண்டு முதல் வெளியான செய்தித்தாள்களை எங்கள் மின் காப்பகத்தில் தேடுங்கள்.

இணையத்தளம்: eresources.nlb.gov.sg/newspapers/

NLB-இன் மின்வளங்களுடன் தொடர்புடைய 10 ஆங்கில சொற்கள் கீழ்க்காணும் சொல் தேடல் கட்டத்தில் மறைந்துள்ளன. அந்தச் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | S | I | J | F | E | R | W | Z | M | U | G | P | I | A | Z | J | F | S | A |
| T | G | I | C | P | B | L | N | K | T | H | S | Z | J | U | G | J | S | D | S |
| L | A | Q | I | Z | O | P | Y | N | E | W | S | P | A | P | E | R | S | G | O |
| H | Q | I | W | W | O | O | T | X | Z | B | R | Z | M | V | I | U | M | U | V |
| B | L | R | M | K | K | X | E | A | B | X | Q | B | Y | Y | Z | D | I | V | N |
| G | J | C | R | S | S | V | N | N | T | N | K | X | L | I | N | Z | A | T | A |
| V | L | L | U | O | N | L | I | N | E | K | O | B | I | Q | L | O | I | W | X |
| P | E | N | D | D | M | I | H | B | H | K | F | Y | B | P | B | E | P | Z | O |
| E | H | H | S | A | Z | U | N | P | Y | P | A | K | R | R | M | Z | H | K | S |
| Q | S | H | T | F | T | S | H | F | R | Z | M | V | A | E | O | Q | V | O | M |
| G | A | T | E | N | B | A | O | P | E | G | K | O | R | S | B | U | J | C | U |
| Z | Z | H | M | X | L | O | B | A | A | C | X | D | Y | S | I | L | U | Y | S |
| M | U | S | A | L | I | G | C | A | D | V | G | Y | U | R | L | L | W | T | I |
| N | Q | E | G | R | W | L | W | F | S | L | W | G | S | E | E | D | B | U | C |
| Q | A | C | A | W | I | G | T | K | F | E | C | M | E | A | J | F | C | N | A |
| B | Q | L | Z | F | V | E | M | P | F | G | S | D | R | D | Z | P | P | S | Z |
| D | M | V | I | P | K | F | C | W | Y | D | G | J | N | E | W | G | H | F | C |
| D | N | N | N | E | S | D | N | L | C | L | O | K | A | R | I | H | Q | Z | A |
| P | K | F | E | O | W | F | O | V | U | T | H | T | M | G | F | L | T | V | T |
| P | C | W | S | K | T | W | B | Y | S | W | R | X | E | D | J | L | A | N | A |

1. HyRead
2. PressReader
3. Naxos Music
4. NewspaperSG
5. eBooks
6. eMagazines
7. Databases
8. Online
9. myLibrary username
10. NLB Mobile



விடைகள்

**உங்கள் வாழ்வின் பொற்காலம் (TOYL)** நிகழ்ச்சித் தொடர் பயனுள்ள கலந்துரையாடல்கள், ஆக்கப்பூர்வமான பட்டறைகள், புத்தகக் குழுக்கள், 50 வயது அல்லது அதற்கும் மேற்பட்டவர்களுக்கான கற்றல் சமூகங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாகும். மின்னிலக்க முறை, வாழ்க்கைத்தொழில், நிலைத்தன்மை, கலைகள், ஆரோக்கியம் என பல்வேறு தலைப்புகளையொட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இன்றே உங்கள் கற்றல் பயணத்தை எங்களுடன் தொடங்க வாருங்கள்!

TOYL நிகழ்ச்சிகளைத் தேடி பதிவு செய்ய: go.gov.sg/toyl

**MakeIT** என்பது எல்லோரும் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றறிந்து, அவற்றைப் பயன்படுத்திப் பார்க்க வாய்ப்பளிக்கும் NLB திட்டமாகும். இதன்வழி பல யோசனைகள் உருபெறுகின்றன.

3D அச்சுப்பணி, மின்னிலக்க வெட்டும் முறைகள், இயந்திரவியல் தொழில்நுட்பம், வெறும் கையால் செய்ய சாத்தியப்படாத சிரமமான பொருள்களைத் துல்லியமாக உருவாக்கும் பிற தொழில்நுட்பம் சார்ந்த வடிவமைப்பு முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பாருங்கள்.



MakeIT-ஐப் பற்றி மேலும் அறிய: go.gov.sg/makeit-nlb

எங்களது நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறுங்கள். TOYL அஞ்சல் பட்டியலில் சேர்ந்துகொள்ள இந்தப் பக்கத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள்: go.gov.sg/50plusmail!

ஆதரவு

கூட்டு ஏற்பாட்டாளர்கள்

DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

NLB | National Library Board Singapore

SG :DIGITAL OFFICE

## இந்த நூலகக் கற்றல் பயண வழிகாட்டியின் மின் பதிவேட்டைக் கீழ்க்காணும் விரைவுத் தகவல் குறியீடுகள் அல்லது இணையத்தளங்கள் வழியாகப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

ஆங்கிலப் பதிப்பு:
go.gov.sg/lljguide-eng-2024

சீனப் பதிப்பு:
go.gov.sg/lljguide-chi-2024

மலாய் பதிப்பு:
go.gov.sg/lljguide-mal-2024

தமிழ் பதிப்பு:
go.gov.sg/lljguide-tam-2024

**கேள்விகளுக்கு**
மின்னஞ்சல்: enquiry@nlb.gov.sg
**தேசிய நூலக வாரியம்**
100 Victoria Street, #14-01
National Library Board, Singapore 188064
www.nlb.gov.sg

Printed in Mar 2024. அனைத்துத் தகவல்களும் வெளியிடப்படும் நேரத்தில் துல்லியமானவை.